# <u>தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை –2021 க்கு பதிவு செய்யும் முறை</u>

தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை–2021 (TNEA-2021) முழுமையாக இணைய வழி விண்ணப்ப பதிவாகவும் மற்றும் இணைய வழி கலந்தாய்வு சேர்க்கையாகவும் அமையும். விண்ணப்பத்திற்கான தகவல்களைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கான பணத்தைச் செலுத்துதல், விருப்பமான கல்லூரி மற்றும் பாடப்பிரிவைப் பதிவு செய்தல், தற்காலிக இடஒதுக்கீட்டை ஏற்றல் அல்லது நிராகரித்தல், முடிவு செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டு ஆணையை பெறுதல் ஆகிய அனைத்தும் இணையவழியாகவே நடத்தப்படும். சான்றிதழ்கள் சரிபார்த்தல் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள **"தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையத்தில்" (TFC)** இணைய வழியாக விண்ணப்பதாரர்கள் இல்லாமல் நடத்தப்படும். **விண்ணப்பதாரர்கள் எல்லா செயல்களையும் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதள வாயிலாக பதிவு செய்யலாம்.** இணையதள வசதி இல்லாதவர்கள், எல்லா சேவைகளுக்கும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையத்தை (TFC) அணுகலாம். அங்கு அவர்களுக்குத் தேவையான எல்லா சேவைகளும் கிடைக்கும்,

முழுமையான இணையவழி கலந்தாய்வு கீழ்க்காணும் பல அடுத்தடுத்த கட்டங்களைக் கொண்டது.

1. விண்ணப்பம் பதிவு செய்தல் மற்றும் அசல் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்தல்
2. சமவாய்ப்பு எண் (Random Number) உருவாக்குதல் (by TNEA Authority)
3. பொறியியல் சேர்க்கை உதவி மையத்தில் இணையவழியாக சான்றிதழ் சரிபார்த்தல் (by TNEA Authority)
4. தரவரிசை வெளியிடுதல் (by TNEA Authority)
5. சேர்க்கைக்கான முன்பணம் செலுத்துதல்
6. விருப்பமான கல்லூரியையும் மற்றும் பாடப்பிரிவையும் பதிவு செய்தல்
7. குறிப்பிட்ட நாளில் தற்காலிக இட ஒதுக்கீடு செய்தல் (by TNEA Authority)
8. இட ஒதுக்கீட்டை உறுதி செய்தல் (by Candidate)
9. இறுதி ஒதுக்கீடு செய்தல் (by TNEA Authority)
10. ஒதுக்கப்பட்ட கல்லூரியில் சேருதல்

விண்ணப்பதாரர்கள் மேலே உள்ள எல்லா விபரங்களையும் அவை செய்யப்பட வேண்டிய நாட்களையும் உரிய நேரத்தில் கவனித்து செயல்பட வேண்டும். எல்லாவற்றுக்குமான முதற்படி, விண்ணப்பத்தை பதிவு செய்தல் அதை எவ்வாறு செய்வது என்பதை இந்த குறிப்பு விவரிக்கிறது.

விண்ணப்பத்தைப் பதிவு செய்ய என்னென்ன விவரங்கள் வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தும் விபரப்படிவம் (Data Sheet), TNEA இணைய தளத்தில் கிடைக்கும். அதைப் பதிவிறக்கம் செய்து அதில் விபரங்களைப் பூர்த்தி செய்தபின் கணினியில் விவரங்களை வரிசையாக உள்ளீடு (Input) செய்தால், விரைவாகவும் சரியாகவும் செய்து முடிக்கலாம். TNEA உதவி மையத்திற்கு வருபவர்கள் கண்டிப்பாக இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னரே கணினியில் பதிவு செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

**விண்ணப்பம் பதிவு செய்தல்**

விண்ணப்ப பதிவை ஆரம்பிக்கும் முன், மாணவர்கள் கீழ்கண்டவைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

1. அலைபேசி எண் (தங்களது அல்லது தங்களது பெற்றோருடையது)
2. மின்னஞ்சல் முகவரி ( இல்லையெனில் புதிதாக உருவாக்கவும்)
3. கடன் அட்டை / பற்று அட்டை / இணையத்தின் வழி செலுத்தும் விவரங்கள்

(அல்லது)

வரைவு காசோலை “THE SECRETARY, TNEA” என்ற முகவரியில் CHENNAI – 25 இல் மாற்றத்தக்க வகையில் இருத்தல் வேண்டும்.

இப்போது நாம் விண்ணப்பம் பதிவு செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**விண்ணப்ப பதிவின் படிகள்:**

1. User Registration ( பயனாளர் விண்ணப்ப பதிவு)
2. Login (உள் நுழைதல்)
3. Personal Information (சுய விவரங்கள்)
4. Special Reservation Information ( சிறப்பு இட ஒதுக்கீடு விவரங்கள்)
5. Scholarship Information (உதவித்தொகை விவரங்கள்)
6. School of Study Information ( பள்ளித் தகவல்கள்)
7. Academic Information (கல்வித்தகுதி தகவல்கள்)
8. Preview Application and Change Information ( மீண்டும் சரிபார்த்து மாற்றுதல்)
9. Payment of Registration fees (விண்ணப்பதிவு கட்டணம் செலுத்துதல்)

10. Download Application in PDF ( விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தல்)

பதிவு செய்தலை எளிதாக்க, அது பல எளிய படிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படிகளை கவனமாக தொடருங்கள். முதலாவதாக www.tneaonline.org என்கிற TNEA இணையதளத்திற்கு செல்லவும். தற்பொழுது நீங்கள் கீழே காணும் கணினி பக்கத்தை காண்பீர்கள்.




இப்போது **"Click here for New User Registration"** என்கிற பொத்தானை கிளிக் செய்யவும். இப்போது கீழ்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும். அதில் "Registration " என்ற பகுதி செய்ய வேண்டிய செயல் என்பதை தற்போது காட்டுகிறது.




விண்ணப்பப் பதிவு பயனாளர் பதிவுக்கான விவரங்கள் பதிவிடல் மேற்கண்ட இணைய பக்கத்தில் உள்ள எல்லா விபரங்களையும் சரியாக பதிவு செய்யவும். விபரங்களை பதிவு செய்கையில் கீழ்க்கண்டவற்றை மனதில் கொள்ளவும்.

1. உங்கள் பெயரை, உங்கள் பத்தாம் வகுப்பு / +2 மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போல பதிவு செய்யவும்.
2. கொடுக்கப்பட்ட அலைபேசி (Mobile Phone) எண் உங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணாக கருதப்படும். இந்த பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கே அனைத்து குறுந்தகவல்களும் அனுப்பப்படும்.
3. மின்னஞ்சல் முகவரி என்பதில் உங்களது சரியான மின்னஞ்சல் முகவரியைக் (email Id) கொடுக்கவும். உங்களுக்கான மின்னஞ்சல் முகவரி இல்லாவிட்டால் புதிதாக ஒன்றை உருவாக்கிப் பின் பதியவும். மின்னஞ்சல் முகவரி உருவாக்குவதில் சிரமம் இருந்தால் உங்கள் பெற்றோரின் மின்னஞ்சலைப் பயன்படுத்தலாம். இந்த பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியே பயனாளர் குறியீடாக (User ID) ஏற்றுக்கொள்ளப்படும். இதன் மூலமாகவே எல்லாத் தகவல்களும் அனுப்பப்படும்.
4. உங்களது கடவுச்சொல்லை (Password) கவனமாக உருவாக்கி கொள்ளவும். கடவுச்சொல்லானது குறைந்தது ஆறு எழுத்துகளைக் கொண்டது. அதில் குறைந்தது ஒரு

எழுத்து எண்ணாகவும், ஒரு எழுத்து சிறப்பு எழுத்தாகவும் (Special Character) மற்றவை எழுத்தாகவும் (Letter) இருக்க வேண்டும்.

5. இங்கு கொடுக்கப்பட்ட விபரங்களைப் பின்னர் மாற்ற இயலாது. எனவே உறுதி செய்வதற்குமுன் சரிபார்த்து உறுதிசெய்யவும்.

உங்கள் பயனாளர் பெயர் / மின்னஞ்சல் (Login Id / Email id), மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கவனமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றை நீங்கள் பலதடவை பயன்படுத்த வேண்டியிருக்கும். பத்திரமாக எங்காவது எழுதிவைத்தாலும் நலம்.

இந்த விபரங்களை முடித்தபின் “SAVE” என்ற பட்டனை கிளிக் செய்யவும்.
அப்பொழுது உங்கள் அலைபேசிக்கும், மின்னஞ்சலுக்கும் ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொல் (OTP) வரும். கீழ்க்காணும் தகவல் உங்கள் கணினித் திரையில் தோன்றும். மின்னஞ்சலில் சில வேளைகளில் தகவல்கள் “Inbox”க்குச் செல்லாமல் “Spam” மெயிலுக்குப் போக வாய்ப்புண்டு, எனவே நீங்கள் அதையும் பார்க்க வேண்டும்.




“OTP எண்ணை பதிவு செய்யவும். இதில் “Submit” என்பதை கிளிக் செய்யவும்.

அனுப்பபட்ட SMS மற்றும் EMAIL கீழ்கண்டவாறு இருக்கும்.

Mobile SMS OTP

Mail OTP







இனி நீங்கள் எப்போது வேண்டுமாயினும் TNEA இணைய தளத்தில் உங்கள் பயனாளர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி (Login Id/ Email Id) மற்றும் கடவுச்சொல்லை (Password) பயன்படுத்தி உள்நுழைவு (Login) செய்து கொள்ளலாம்.



இப்பொழுது உள்நுழைவு (Login) செய்தால் கீழ்க்கண்ட கணினி திரை தோன்றும். உள்ளீடு செய்யும் தகவல்களானது 8 நிலைகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

i. Personal information (**சுய விவரங்கள்**)
ii. Special reservation (சிறப்பு ஒதுக்கீடு)
iii. Scholarship information (**உதவித்தொகை விவரங்கள்**)
iv. School of study information **( பள்ளித் தகவல்கள்)**
v. Academic information **(கல்வித்தகுதி தகவல்கள்)**
vi. Preview and Change Information **(மீண்டும் சரிபார்த்து மாற்றுதல்)**
vii. Payment **(விண்ணப்பதிவு கட்டணம் செலுத்துதல்**)
viii. Generate Report (விண்ணப்படிவத்தினை உருவாக்கு)






மேற்கண்ட விபரங்களை பதிவு செய்து Save & Continue என்பதை கிளிக் செய்யவும். விண்ணப்பப் பதிவு பயனாளர் வேறு மாநிலத்தவராக இருப்பின் தங்களுக்கான தரப்பட்ட தகுதி வரம்புகளில் ஏதேனும் ஒன்றை தெரிவு செய்து சமர்ப்பித்தால் மட்டுமே மேற்கொண்டு தங்களுக்கான விண்ணப்பதிவினை தொடர்ந்து பதிவு செய்ய இயலும்.



**<u>சிறப்பு ஒதுக்கீட்டுக்கான விபரங்கள் சமர்ப்பிக்கும் பகுதி</u>**

சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவானது கீழ்கானும் பிரிவினர்களுக்கானது.

1. சிறந்த விளையாட்டு வீரர்கள்
2. முன்னாள் இராணுவத்தினரின் மகன்கள் / மகள்கள்
3. மாற்றுத்திறனாளிகள்

தெரிவு செய்யும் ஒவ்வொரு சிறப்பு பிரிவுக்கும் கூடுதலாக ரூ. 100 செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்பட்ட சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவிற்கான தகுதியான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க தவறினால் சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவிற்கான தகுதி இழந்தவராக கருதப்படும்.

சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவிற்கான கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைவரும் பொதுக்கலந்தாய்விலும் கலந்து கொள்ள தகுதியுடையவர்.

தங்களது சான்றிதழ் சரிபார்ப்பினை செய்வதற்கு ஏதுவாக தங்களது மாவட்டத்தின் அருகிலுள்ள சான்றிதழ் சரிபார்ப்பு மையத்தினை தெரிவு செய்து கொள்ளவும். விளையாட்டு பிரிவினர்க்கான சான்றிதழ் பதிவேற்றம் மற்றும் சரிபார்ப்பு பற்றிய தகவல்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

கீழ்க்கண்ட இணையதள பக்கத்தில் தங்களுக்கு உரித்தான சிறப்பு ஒதுக்கீட்டுக்கான விபரங்களை சரியான முறையில் பதிவு செய்து Save & Continue என்பதை கிளிக் செய்யவும்.




தகுதியானவர்கள் கல்வி உதவித்தொகை, கட்டண தள்ளுபடி போன்றவற்றுக்கு தேவையான உதவித்தொகை தகவல்களை உள்ளிடலாம். தேவையான விவரங்களை முழுமையாக உள்ளிட்ட பிறகு “Save and Continue” பொத்தானை அழுத்தவும்.



அடுத்து “School of Study Information” விபரங்களை தற்போது கீழே காணும் இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்.







அடுத்து “Academic Information” விபரங்களை தற்போது கீழே காணும் இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்

**2021 ஆம் கல்வியாண்டில் +2 தேர்வுகளை தமிழ்நாடு State Board இல் முடித்த மாணவர்கள் தங்களது மதிப்பெண் விவரங்களை உள்ளிட வேண்டியதில்லை.**







உங்கள் கல்வித்தகுதி மற்றும் **+2** முடித்த ஆண்டைப் பொறுத்து HSC (Academic or Vocational) அல்லது அதற்கு சமமான பாடங்களுக்கான மதிப்பெண்களை நீங்கள் சமர்ப்பிக்கலாம். HSC **மாணவர்கள்** உங்கள் தகுதியை உள்ளிடுகிறீர்கள் என்றால் இணையப்பக்கம் பின்வருமாறு திறக்கும்.




தற்போது பூர்த்தி செய்த விண்ணப்பத்தை (Save and Continue) பட்டனை அழுத்தி சேமித்து வைக்கலாம். மேலும் விண்ணப்பத்தில் ஏதேனும் மாற்றும் செய்ய வேண்டியிருந்தால் “Back” பட்டனை அழுத்தி பூர்த்தி செய்யவும். விண்ணப்ப விவரங்களை நன்றாக சரிபார்த்த பின் பதிவுக் கட்டணத்திற்கான இணையதள பக்கம் சென்று கட்டணத்தை செலுத்தவும். **தங்களது பதிவுக்கட்டணத்தை செலுத்தியபின் உங்களது விண்ணப்பத்தில் உள்ள விபரங்களை மாற்றம் செய்ய இயலாது.**




## <u>பதிவுக் கட்டண பகுதி</u>

தற்பொழுது பதிவுக் கட்டணத்திற்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். இதில் நீங்கள் கொடுத்த தகவலின்படி (பதிவுக் கட்டணத் தொகை + சிறப்பு இட ஒதுக்கீடு கட்டணத் தொகை) எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை காட்டும். இந்தத் தொகையை பற்று அட்டை/ கடன் அட்டை மற்றும் இணைய வழி வங்கிக் கணக்கு (Credit Card/ Debit Card/ Net Banking) மூலமாக செலுத்த வேண்டும். (கேட்பு வரைவோலையை (Demand Draft) TFC வழியாக மட்டுமே செலுத்த முடியும்) இதை செய்வதற்கு “ Pay Now” என்பதை கிளிக் செய்யவும், அதற்கான கணிணித் திரையில் உங்கள் தகவல்களைத் தர வேண்டும்.



மேலே கண்ட திரையில் ஏதாவது ஒரு Gateway-யை தேர்ந்தெடுத்து கிளிக் செய்யலாம். செய்தால், தொகை பெறும் வங்கியின் திரை வரும். தொகையை செலுத்தி முடித்தவுடன் உங்கள் செல்பேசிக்கு விண்ணப்ப எண்ணும், பரிவர்த்தனை ஐடியும் அனுப்பப்படும்.

தங்களது பதிவு கட்டண பரிவர்த்தனை முழுமையடைந்தால், தங்களது இணையப்பக்கம் கீழ்கண்டவாறு தோன்றும்.




தங்களுக்கான பதிவு கட்டண பரிவர்த்தனை முழுமையடையாமல் தவறினால், தங்களுக்கான கட்டண பரிவர்த்தனையை அடுத்த பத்து நிமிடங்களுக்கு மீண்டும் செலுத்த இயலாது. தங்களது பதிவு கட்டண பரிவர்த்தனை விபரங்களை உங்களுடைய Personal Profile Settings பக்கத்தில் பார்த்து கொள்ளலாம்.




நிர்ணயிக்கப்பட்ட தமிழ் நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையம் (TFC) வாயிலாக மட்டுமே வரைவோலை (Demand Draft)அனுமதிக்கப்படுகிறது.

முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை (Generate Report) பட்டனை அழுத்தி சமர்ப்பித்து விடலாம். விண்ணப்பத்தை சமர்ப்பித்தப்பின் கீழ்க்காணும் திரை தோன்றும்.

இப்போது “Download Now” என்பதில் கிளிக் செய்தால், உங்கள் முழு விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்படும். அத்துடன் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான படிவங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றையும் உரியவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

GOVERNMENT OF TAMIL NADU
DIRECTORATE OF TECHNICAL EDUCATION
TAMIL NADU ENGINEERING ADMISSION - 2021

Application Number: 201116

**Personal Information**

Name: Sivgurunathan
Communication Address: 12,First street Papanaickenpalayam Coimbatore
State: Tamil nadu
Taluk: Coimbatore(South)
Native District: Coimbatore
Date of Birth (DD-MM-YYYY): 19-07-2003
Mother Tongue: Tamil
Nativity: Tamil nadu
Name of the Community: MBC (V)
Aadhar Number (optional): --

Name of the Parent/Guardian: Ganapathi
Permanent Address: 12,First street Papanaickenpalayam Coimbatore
District: Coimbatore
Communication address pincode: 641037
Civic status of Native: Municipality
Gender: Male
Nationality: Indian
Religion: Hindu
Name of the Caste: Vannialkula Kshatriya (including Vanniyar, Vanniya,Vannia Gounder, Gounder or Kander, Padayachi, Palli & Agnikula Kshatriya)

**Special Reservation Information**

Whether you have Sports Certificates of District / Divisional / State/ National/ International?: No
Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible): No
Differently Abled Type: --
Eminent Sports Person: No
Differently Abled Person: No
TFC Center for certificate verification: Govt. Polytechnic College for Women, Bharathiyar Road, New Siddhapudur (po), Coimbatore District– 641 044

**Scholarship Information**

Parent Occupation: Business
First Graduate Tuition Fee Concession: No
AICTE Tuition Fee Waiver(TFW) Scheme: No
Annual Income: 1 lakh to 2.5 Lakh
Availed First Graduate Tuition Fee Concession: No
Post Matric Scholarship (SC/SCA/ST/Converted Christians): No

**School of Study Information**

Studied VIII, IX, X, XI, XII in Tamil Nadu: Yes
Have you studied VI, VII, VIII, IX, X, XI, XII in Government school?: No
Civic status of school: Municipality

| Class | Year of Passing | Name of the school | District | State | School of study |
|---|---|---|---|---|---|
| VI Std. | 2015 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| VII Std. | 2016 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| VIII Std. | 2017 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| IX Std. | 2018 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| X Std. | 2019 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| XI Std. | 2020 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |
| XII Std. | 2021 | Viswadeepthi Higher Secondary School | Coimbatore | Tamil nadu | – |

**Academic Information**

Qualifying Examination: HSC
Permanent register number: 70254325
Qualified Year: 2021
Group Code: Physics/ Chemistry/ Maths/ Computer Science
HSC maximum (total) marks: 600
SSLC maximum (total) marks: 500
Community certificate number (if applicable): 8797621

Name of the Board of Examination: Tamil nadu Board of Higher Secondary Education
HSC Roll number: 11234678912
HSC Group: HSC Academic
Medium of Instruction: English
HSC obtained total marks: 584
SSLC obtained total marks: 444
Nativity certificate number (if applicable): 6192036

**கட்டணப் பரிவர்த்தனை முடிந்ததும் நீங்கள் விண்ணப்பத்தைத் திருத்த முடியாது** . **சான்றிதழ் சரிபார்ப்பு ஆன்லைனில் செய்யப்படுகிறது** .**இதற்காக நீங்கள் தேவையான அனைத்து ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை கீழே காட்டப்பட்டுள்ள பொத்தானை அழுத்தி பதிவேற்ற வேண்டும்** .**சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுக்கு**150 **குறைந்தபட்ச அளவு**) Kb **மற்றும் அதிகபட்ச அளவு** 1 MB). **புகைப்படம் மற்றும் கையொப்பத்திற்கு**) **குறைந்தபட்ச அளவு**20 Kb

**மற்றும் அதிகபட்ச அளவு**50 Kb ).



GOVERNMENT OF TAMIL NADU

TAMIL NADU ENGINEERING ADMISSION - 2021

Logout

Home

Upload certificates

Freeze Upload

Instructions

1. All file that are marked with astericks (*) symbol are mandatory, you must upload them
2. Select a file and upload for each certificate separately, you can also drag and drop the file to the upload button to initiate upload.
3. Each certificate can be uploaded in an image or PDF file format, file size should be from 150KB to 1MB. Supported image formats are JPG,JPEG,JPE & PNG.
4. Passport size photo and Signature of the Applicant should be uploaded only in image format, file size should be from 20KB to 50KB. Supported image formats are JPG,JPEG,JPE & PNG.
5. To replace new version of file, either delete the file using delete icon and upload new one or just upload new one which will replace the existing version.
6. If there are any additional certificates to be produced , please upload them via additional certificate option.
7. Once upload is completed, make sure you freeze the upload inorder to start your certificate verification from our end, but once uploads are frozen, you will not be able to delete or re-upload the certificate again, kindly double check before freeze.
8. Sports candidates need to download Certificate-I, Certificate-II from our website, fill them and upload along with your sports certificates for each academic years, if suppose you got more than one certificate per year to be uploaded, please scan and convert them to single PDF file and upload. Maximum size of the file is 2MB.
9. Certificates that are marked as optional, you can ignore them if you don't have or not applicable.
10. If file upload fails, retry the upload again. If you face any issues in upload please reach out to near by TFC for help or call us on our helpline number or send us email to care@tneaonline.org



GOVERNMENT OF TAMIL NADU

TAMIL NADU ENGINEERING ADMISSION - 2021

Logout

Home

10. If file upload fails, retry the upload again. If you face any issues in upload please reach out to near by TFC for help or call us on our helpline number or send us email to care@tneaonline.org

* 10th Mark Sheet

Upload

Supported formats are PNG,JPEG,JPG,JPE & PDF, File size 150KB to 1MB

11th Mark Sheet (optional)

Upload

Supported formats are PNG,JPEG,JPG,JPE & PDF, File size 150KB to 1MB

* 12th Mark Sheet/Self attested downloaded Mark sheet

Upload

Supported formats are PNG,JPEG,JPG,JPE & PDF, File size 150KB to 1MB

Transfer Certificate (optional)

Upload

Supported formats are PNG,JPEG,JPG,JPE & PDF, File size 150KB to 1MB

* Permanent Community Certificate

Upload




**சான்றிதழ்கள் பதிவேற்றம் முடிக்கப்பட்ட பின்னரே விண்ணப்பதாரர்கான பதிவேற்ற சான்றிதழ் சரிபார்ப்பு செயல்முறை தொடங்கப்படும் .எனவே, தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றவும். அனைத்து சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சரியாக பதிவேற்றப்பட்டிருப்பதாக நீங்கள் உறுதிப்படுத்திய பின்னர்** TNEA 2021**க்கு விண்ணப்பிக்கும் செயல்முறையை முடிக்க** "FREEZE UPLOAD" **பொத்தானை அழுத்தவும்.**

**"FREEZE UPLOAD" பொத்தானை அழுத்திய பின் மீண்டும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை** திருத்தவோ அல்லது மாற்றம் செய்**ய**வோ இயலாது.